Registered as a News Paper

பக்கங்கள் 04

விலை ரூபா 5-00

நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

# ஈழநாதம்

THE EELANAATHAM

Peoples Daily

மக்கள் தினசரி

நாதம் 04 | திருவள்ளுவர் ஆண்டு 2024 | வைகாசி 12 | [25-05-93] | செவ்வாய்க்கிழமை | ஓசை 96

## யாழ். ஆஸ்பத்திரிக்கு ஜெனரேற்றர்கள் கொழும்பிலிருந்து எடுத்துவர முயற்சி

யாழ். போதனா மருத்துவமனைக்கு கொழும்பில்இருந்துஇரண்டுபுதியமின் பிறப்பாக்கிகள் எடுத்துவரப்படவுள்ளன. இதற்கான முயற்சிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அடுத்தமாத முற்பகுதியில் பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையும் என்று எதிர்பார்க்கப்படும் ''குமாரி'' என்ற கப்பலில் இவ்விரண்டு மின் பிறப்பாக்கிகளும் எடுத்துவருவதற்கு அதிக பட்ச முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஒவ்வொன்றும் சுமார் 200 கே. வி. மின்சாரத்தை பிறப்பிக்கக் கூடியவை என்று கூறப்படுகிறது. கொள்வனவு செய்யப்பட்டு நீண்டகாலமாக இவை கொழும்பில் காத்துக் கிடந்ததாகவும் இவற்றை கப்பலில் ஏற்றுவது அல்லது இறக்குவதில் சில சிரமங்கள் இருப்பதாகவும் தெரியவருகிறது. கப்பலில் பொருத்தப்பட்டிருக்கும் பாரம் தூக்கியின் தூக்குதிறன் போதாமல் (4ஆம் பக்கம் பார்க்க)

# கிளாலி கடற்பரப்பில் கடும் மோதல்; கடற்படை படகுகள் விரட்டியடிப்பு

## பயணிகள் போக்குவரத்து தடைப்பட்டது

(தென்மராட்சி)

கிளாலி கடற்பரப்பில் நேற்றிரவு சிறிலங்கா கடற்படையினருக்கும் கடற் புலிகளுக்கும் இடையில் கடும் மோதல்கள் இடம்பெற்றன. சுமார் பதினைந்து நிமிடம் இடம்பெற்ற இம்மோதலின் போது கடற்படையினர் கடற் புலிகளால் விரட்டியடிக்கப்பட்டனர். இதனைத் தொடர்ந்து நேற்று பயணிகள் போக்குவரத்தும் தடைப்பட்டது.

நேற்றுமாலை 6-30 மணியளவில் பூநகரிக்கடற்கரையில் இருந்து இரண்டு பீரங்கிப்படகுகளில் புறப்பட்ட கடற்படையினர் கிளாலி கடல் நீரேரியில் புகுந்தனர். இவர்கள் பயணிகள் படகுகள் மீது தாக்குதல் நடாத்த முயற்சித்தசமயம் கடற்புலிகள் கடற்படையினர் மீது தாக்குதல் தொடுத்தனர்.

இதனைத் தொடர்ந்துகடற் புலிகளுக்கும் சிறிலங்கா கடற்படையினருக்குமிடையில் உக்கிரமோதல் மூண்டது. சுமார் 15 நிமிடங்கள் வரை இரு தரப்பினருக்குமிடையில் கடும் சண்டை நடைபெற்றது. இதைத்தொடர்ந்து சிறிலங்கா கடற்படையினர் பின்வாங்கிச் சென்றுவிட்டனர்.

இதனைத் தொடர்ந்து கிளாலியூடாக நடைபெறும் பயணிகள் படகு சேவையும் தடைப்பட்டதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. (86)(சு)(நி)

### கிளாலி – பூநகரி படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என யாழ். மாவட்ட வருவாய்ப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

## சமாதானம் ஏற்படும்

[கொழும்பு]

அரசியல் ரீதியாக ஏற்பட்டுள்ள புதிய மாற்றங்கள் சமாதானத்திற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தியுள்ளன என்று அதி வணக்கத்திற்குரிய அதிமேற்றிராணியார் கெனத் பர்னான்டோ கூறியுள்ளார்.

## அரசியலமைப்பில் மாற்றம்

[கொழும்பு]

சிறிலங்காவின் அரசியலமைப்பு 15 வருடங்கள் பழமை வாய்ந்தது. எனவே மாறிவரும் கால ஓட்டங்களுக்கு ஏற்றவாறு அதனை மாற்றி அமைக்கவே விரும்புகிறோம் என அரசியலமைப்பு விவகார மற்றும் ராஜாங்க அலுவல்கள் அமைச்சர் திரு. கே. என். சொக்ஸி தெரிவித்துள்ளார்.

## பென்சன் வவுச்சர் வருவதில் தாமதம்

(யாழ்ப்பாணம்)

வடபகுதி ஓய்வூதியர்களுக்கான ஓய்வூதிய வவுச்சர்கள் வருவதில் மேலும் தாமதம் ஏற்பட்டுள்ளது.

குமாரி கப்பலில் வடபகுதியைச் சேர்ந்த சகல ஓய்வூதியர்களுக்குமான வவுச்சர்கள் வருமென முன்னர் செய்தி வெளிவந்தது தெரிந்சதே. இக்கப்பல் வருமென எதிர்பார்க்கப்பட்ட திகதியிலும் பல நாட்கள் பிந்தியே வருமென தெரியவந்துள்ளது. அக்கப்பல் வரும் திகதியும் திட்டவட்டமாக தெரியவில்லை. அதே வேளை வரும் 30ஆம் திகதி வாதுவ கப்பல் வந்த பின்பே குமாரி வருமென எதிர்பார்க்கப்படுகின்றது. [சி]

## அரசஊழியர் கப்பல்பயணம் பதிவு செய்தல் நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்துக்கும் திருக்கோணமலைக்கு மிடையிலான அரச ஊழியர்களது போக்குவரத்துக்கு பதிவு செய்யும் ஒழுங்கு காலவரையறை இன்றி யாழ். செயலகத்தால் நிறுத்தப்பட்டுள்ளது.

இதற்கான அறிவிப்பொன்று யாழ். அரச அதிபரின் அலுவலகத்தின் முன்னால் தொங்கவிடப்பட்டுள்ளது. ''இன்று முதல கப்பலில செல்வ்வாரது விண்ணப்பங்கள் ஏற்றுக கொள்ளப்படமாட்டாது'' என்று அவ் அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் கப்பலில் பயணம் செய்வதற்கு செயலகம் வந்த பலர் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றதை அவதானிக்க முடிந்தது.

## புலிகளுக்கு எதிரான போர் அணுகுமுறை மாற்றமில்லை

- ரணில் தெரிவிப்பு

[கொழும்பு]

விடுதலைப் புலிகளுக்கெதிரான போரில் அரசின் அணுகு முறையில் மாற்றம் எதுவுமில்லையென்று பிரதமமந்திரி திரு. றணில் விக்கிரமசிங்கா கூறியுள்ளார்.

எதிர்வரும் 1995 தேர்தலில் தமிழ் மக்கள் பங்குபற்றினால் அதுவே எமக்கு பெரும் வெற்றிதான் என்றும் பிரதமர் மேலும் கூறியுள்ளார்.

## அரசின் சூழ்ச்சிக்கு எதிராக எதிர்ப்பியக்கம்

(கொழும்பு)

அரசின் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றும் சூழ்ச்சிக்கெதிராக தென்னில கையில் அரசுக்கெதிரான எதிர்ப்பியக்கம் ஒன்றை ஆரம்பிப்பதற்கு எதிரணிக் கட்சிகள் தயாராகி வருகின்றன.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி மற்றும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி ஆகிய எதிரணி அரசியல் கட்சிகள் இணைந்து மேற்படி எதிர்ப்பியக்கத்தை நடாத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றது. இதற்காக அரசுக்கெதிரான மக்களின் எதிர்ப்புணச்சிகளை ஒன்றிணைத்துக் கொள்வதற்கு முடிவெடுக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

[4ஆம் பக்கம் பார்க்க]

## உணவுக் கப்பல்கள் தாமதமாகவே வரும்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டிற்கான அத்தியாவசிய உணவுப் பொருள்களை எடுத்துவரும் சரக்கு கப்பல்கள் காலதாமதமாகவே பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையும் என்று கொழும்பில் இருந்து கிடைக்...

...றன.

இம்மாதம் 27ஆம் திகதி பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையும் என்று எதிர்பார்க்கப்பட்ட ''குமாரி'' கப்பலில் இதுவரை பொருள்கள் எதுவும ஏற்றப்படவில்லை

## மீனவர்கள் மீது எறிகணை வீச்சு

(குருநகர்)

ஞாயிறு இரவு 7 மணியளவில் மண்டைதீவு சிறிலங்கா இராணுவ முகாமில் இருந்து

...கள் பூநகரி - பூவரசந்தீவுப்பகுதிக் கடலில் வீழ்ந்து வெடித்ததென கடற்றொழிலாளர்கள் தெரிவித்தனர்.

### பூநகரிப் பாதை விவகாரம்

# முத்தரப்பு உடன்பாட்டிற்கு

## பதிவு செய்தல் நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்துக்கும் திருக்கோணமலைக்குமிடையிலான அரச ஊழியர்களது போக்குவரத்துக்கு பதிவு செய்யும் ஒழுங்கு காலவரையறை இன்றி யாழ். செயலகத்தால் நிறுத்தப்பட்டுள்ளது.

இதற்கான அறிவிப்பொன்று யாழ். அரசஅதிபரின் அலுவலகத்தின் முன்னால் தொங்கவிடப்பட்டுள்ளது. ''இன்று முதல கப்பலில செல்வோரது விண்ணப்பங்கள் ஏற்றுக கொள்ளப்படமாட்டாது'' என்று அவ் அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் கப்பலில் பயணம் செய்வதற்கு செயலகம் வந்த பலர் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றதை அவதானிக்க முடிந்தது.

கள் படகுகள் மீது தாக்குதல் நடாத்த முயற்சித்தசமயம் கடற்புலிகள் கடற்படையினர் தரப்பினருக்குமிடையில் கடும் சண்டை நடைபெற்றது. இதைத்தொடர்ந்துசிறிலங்கா தடைப்பட்டதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. (86)(க)(நி)

### கிளாலி – பூநகரி
## படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என யாழ். மாவட்ட வருவாய்ப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

## புலிகளுக்கு எதிரான போர் அணுகுமுறை மாற்றமில்லை

- ரணில் தெரிவிப்பு

[கொழும்பு]

விடுதலைப் புலிகளுக்கெதிரான போரில் அரசின் அணுகுமுறையில் மாற்றம் எதுவுமில்லையென்று பிரதமமந்திரி திரு. றணில் விக்கிரமசிங்கா கூறியுள்ளார்.

எதிர்வரும் 1995 தேர்தலில் தமிழ் மக்கள் பங்குபற்றினால் அதுவே எமக்கு பெரும் வெற்றிதான் என்றும் பிரதமர் மேலும் கூறியுள்ளார்.

அரசின் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றும் சூழ்ச்சிக்கெதிராக தென்னில லைகயில் அரசுக் கெதிரான எதிர்ப்பியக்கம் ஒன்றை ஆரம்பிப்பதற்கு எதிரணிக் கட்சிகள் தயாராகி வருகின்றன.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி மற்றும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி ஆகிய இணைந்து மேற்படி எதிர்ப்பியக்கத்தை நடாத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றது. இதற்காகஅரசுக்கெதிரான மக்களின் எதிர்ப்புணர்ச்சிகளை ஒன்றிணைத்துக் கொள்வதற்கு முடிவெடுக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

[4ஆம் பக்கம் பார்க்க]

## மீனவர்கள் மீது எறிகணை வீச்சு

(குருநகர்)

ஞாயிறு இரவு 7 மணியளவில் மண்டைதீவு சிறிலங்கா இராணுவ முகாமில் இருந்து ஏவப்பட்ட மூன்று எறிகணைகள் பூநகரி - பூவரசந்தீவுப்பகுதிக் கடலில் வீழ்ந்து வெடித்ததென கடற்றொழிலாளர்கள் தெரிவித்தனர்.

[4ஆம் பக்கம் பார்க்க)

## உணவுக் கப்பல்கள் தாமதமாகவே வரும்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டிற்கான அத்தியாவசிய உணவுப் பொருள்களை எடுத்துவரும் சரக்கு கப்பல்கள் காலதாமதமாகவே பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையும் என்று கொழும்பில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இம்மாதம் 27ஆம் திகதி பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையும் என்று எதிர்பார்க்கப்பட்ட ''குமாரி'' கப்பலில் இதுவரை பொருள்கள் எதுவும் ஏற்றப்படவில்லை எனவே இக் கப்பல் அடுத்த

( 4 ஆம் பக்கம் பார்க்க )

### பூநகரிப் பாதை விவகாரம்

# முத்தரப்பு உடன்பாட்டிற்கு யூ. என். எச். சி. ஆர். முயற்சி

(கொழும்பு)

பூநகரி-சங்குப்பிட்டி பாதை விவகாரம் தொடர்பாக முத்தரப்பு உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்திக் கொள்ளும் முயற்சியில் அகதிகளுக்கான ஐ நா. சபை பிரதிநிதி ஈடுபட்டுள்ளதாக கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

மேற்படி பாதை யூடாக பொதுமக்கள் பயணம் செய்வது தொடர்பாகவே இப் பேச்சுவார்த்தை நடைபெற்று வருவதாகவும் இதற்கு அரசாங்கம், விடுதலைப் புலிகள் மற்றும் யூ. என். எச். சி. ஆர். ஆகியோர் இணைந்த முத்தரப்பு உடன்படிக்கை ஒன்று ஏற்படுத்திக் கொள்ளப்பட வேண்டும் என யூ. என். எச். சி. ஆர். பிரதிநிதி சிறிலங்கா அரசாங்கத்திடம் ஆலோசனை தெரிவித்துள்ளதாக தகவல் அறிந்த வட்டாரங்கள் கொழும்பில் தெரிவித்தன.

# தமிழக அரசைக்கலைத்துவிடுமாறு ஜெயலலிதா ஆளுநரை கோரினார்?

(சென்னை)

தமிழக அரசைக் கலைத்துவிட்டு உடனடியாக புதிய தேர்தலை நடாத்துமாறு தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா தமிழக ஆளுநர் திரு பீஸ்ம நாராண சிங்கிடம் கோரிக்கை விடுத்தார் என அ. தி. மு. க. வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

நேற்றுமுன்தினம் தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா தமிழக ஆளுநர் திரு. பீஸ்மன் நாராயண் சிங்கை சந்தித்து நாற்பது நிமிடங்கள் வரை இரகசியப் பேச்சுவார்த்தை நடத்தினார் எனவும் இதன்போது உதவியாளர் எவரும் அருகில் இருக்கவில்லை எனவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

இவ் இரகசியப் பேச்சுவார்த்தையின்போதே மாநிலஅரசை உடனடியாகக் கலைத்துவிட்டு புதிதாக தேர்தலை நடாத்துமாறு செல்வி ஜெயலலிதா ஆளுநரிடம் கேட்டுக்கொண்டதாக அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினர் பி. பி. ஸிஂகுத் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை தமிழக ஆளுநருக்கும் தமிழக முதல்வருக்குமிடையே நடைபெற்ற இரகசிய பேச்சுவார்த்தை தொடர்பாக கருத்து வெளியிட்ட ஆளுநர் மாளிகை வட்டாரங்கள் தமிழ்நாட்டில் நிலவும் அரசியல் நிலைமை குறித்தே இவ் இருவரும் பேசினார்கள் எனத் தெரிவித்துள்ளன.

### தென், வடமேல் மாகாணசபைகள் குறித்து

# நீதி மன்றத்தில் வழக்கு; எதிர்க்கட்சிகள் முடிவு

(கொழும்பு)

தென், வடமேல் மாகாண சபைகளுக்கு ஐக்கிய தேசியக் கட்சி முதலமைச்சர்களை நியமித்ததைக்கண்டித்து எதிர்க்கட்சிகள் நீதி மன்றம் செல்ல தீர்மானித்துள்ளன.

இவ்வாறு முதலமைச்சர்களை நியமித்ததைத் தடுத்து நிறுத்துமாறு நீதிமன்றத்தைக் கோரும் விண்ணப்பம் ஒன்றைத் தயாரிக்க ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி, பொதுமக்கள் ஐக்கிய முன்னணி என்பன முடிவு செய்துள்ளன.

இத்தகவல்கள்நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

எதிர்க்கட்சியினர் சிலர் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஒத்துழைப்பு வழங்கத் தயாராக இருப்பதாக வெளிவந்த செய்தியை காமினி திசநாயக்க மறுத்தார். இவ்விரு மாகாண சபைகளுக்கும் தெரிவான

( 4 ஆம் பக்கம் பார்க்க)

# எதிர்க்கட்சிகள் ஆட்சிகுறித்து ஆளுநர் ஆராயவேண்டும்

### தமிழக காங்கிரஸ் மகஜர்

(சென்னை)

தமிழகத்தில் எதிர்க்கட்சிகள் ஆட்சி அமைக்க முடியுமா என்பது பற்றி ஆராயாது தமிழக அரசைக் கலைக்கக் கூடாது என தமிழக இந்திரா காங்கிரஸ் கட்சியினர் ஆளுநரை மகஜர் மூலம் கேட்டுள்ளனர்.

தமிழக சட்டமன்றத்திற்கு இன்னும் மூன்று ஆண்டுகள் ஆயுட்காலம் உள்ளது. இந்நிலையில் செல்வி ஜெயலலிதா மாநிலஅரசைக் கலைக்கும் படி பரிந்துரை செய்யக் கூடாது என்பதை எதிர்பார்க்கும் காங்கிரஸ் கட்சி ஆளுநரிடம் மனு ஒன்றை கொடுத்துள்ளது.

எதிர்க்கட்சிகள் ஆட்சி அமைக்க முடியுமா என்பது பற்றி ஆராயாமலும் அதற்கான வாய்ப்பை எதிர்க்கட்சிகளுக்கு தராமலும் தமிழக முதல்வரின் பரிந்துரைப்படி சட்டமன்றத்தைக் கலைத்து விடக்கூடாது என தமிழக ஆளுநரை காங்கிரஸ் கட்சி மகஜர் மூலம் கேட்டுள்ளது.

தற்போது சட்டமன்றத்தில் உள்ள அ. தி. மு. க. உறுப்பினர்கள் 160 பேரில் அரைவாசிப்பேருக்குமேல் சட்டமன்றத்தைக் கலைப்பதை எதிர்க்கிறார்கள். அவர்கள் தனிக் குழுவாக பிரிந்து இந்திரா காங்கிரசுடன் இணைந்து கூட்டாட்சிஅமைக்க தயாராகவுள்ளனர் எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# வீரப்பனின் கண்ணிவெடிக்கு 6 அதிரடிப் பொலிஸார் பலி

### பொலிஸ் சுப்ரின்டன் படுகாயம்

(பங்களூர்)

கர்நாடக-தமிழ்நாடுஎல்லை அருகே காட்டுப்பகுதியில் வீரப்பன் குழு வைத்த கண்ணிவெடி நேற்று வெடித்ததில் கர்நாடக சிறப்பு அதிரடிப் படையை சேர்ந்த சப் இன்ஸ்பெக்டர் ஒருவர் உட்பட 6 கான்ஸ்டபிள்கள் பலியாகினர். பொலிஸ் அதிகாரி உட்பட 7 பேர் காயமடைந்தனர். இவர் கர்நாடக சிறப்புப்படையின் உயர் அதிகாரியாவார்.

பாலாறு ஆற்றினருகே பொலிஸ் குழுவினர் ஜீப்பில் சென்று கொண்டிருந்தபோது இச்சம்பவம் நடந்தது நேற்றுக் காலை சிறப்புப்படையினர் இப்பகுதியில் சென்று கொண்டிருந்தபோது முன்னால் சென்ற ஜீப் கண்ணிவெடியில் சிக்கி சிதறியது. பின்னால் சென்ற பொலிஸ் சுப்ரின்டனின் கார் மீது தொடர்ந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்

[4ஆம் பக்கம் பார்க்க]

## ஆட்சியை கவிழ்க்க மறுத்த ஆளுநர் மாற்றப்பட்டாராம்

(சென்னை)

செல்வி ஜெயலலிதா தலைமையிலான அரசைக் கவிழ்ப்பதற்கு திரு. பீஷ்ம நாராயண் சிங் மறுத்துவிட்டதால் தான் தமிழக ஆளுநர் மாற்றப்பட்டுள்ளதாக பாரதீய ஜனதா கட்சி குறை கூறியுள்ளது.

அக்கட்சியின் துணைத் தலைவர் புதுடில்லியில் நேற்று செய்தியாளர்களிடம் பேசுகையில் திரு. பீஷ்ம நாராயண் சிங் தமது பதவியை ராஜினாமா செய்தது அதிர்ச்சி தருவதாகவுள்ளது என்றார்.

## அ.தி.மு.க. அரசுக்கு எதிராக 9 மாத சதித் திட்டம்

–ஜெயலலிதா குற்றச்சாட்டு

(சென்னை)

அ. தி. மு. க. அரசைக் கலைக்க கடந்த சில மாதங்களாக திட்டமிடப்பட்டு வருவதாக தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா குறை கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் கருத்து தெரிவிக்கையில் கடந்த 9 மாதங்களாகத் தனக்கு எதிராக தன்னை அவமதித்து அரசைக் கவிழ்க்க நன்கு திட்டமிடப்பட்ட உறுதியான பிரசாரம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இம் மாதிரியான முயற்சிகள் தன்னைப் போன்ற நல்லவர்கள் பொது வாழ்வில் இனிமேல் ஈடுபடும் ஊக்கமும் எண்ணமும் இல்லாது செய்து விடும் என்றார்.

## வரி விளம்பரம்


### 0 / L கணிதம்

அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படுகிறது. சனி, ஞாயிறு 12.00 - 1.30 செவ்வியாழன் 5-6 PAPER CLASS ஆண்டு 6,7,8,9,10 வகுப்புகளும் நடைபெறுகின்றன. விபரங்கட்கு பா. கிருபாகரன் 327, நாவலர் வீதி [நாவலர் கலாகார மண்டபம் முன்பாக] யாழ்ப்பாணம் [4935]

### துளிர்

தமிழ்நாடு, புதுவை அறிவியல்இயக்கம் வெளியிடும் சிறுவர்களுக்கான அறிவியல் மாத இதழ் மாணவர்களுக்கு அதிக பயன் தரக்கூடியது விபரங்கட்கு: வசந்தம் புத்தக நிலையம் 405, அருச்சுனா றோட், யாழ்ப்பாணம். [4923]

### உதிரிப்பாகங்களுக்காக சகல மணிக்கூடுகள் றேடியோக்கள்

நல்ல நிலையில் உள்ள எலக்ரோனிக், ஓட்டோமற்றிக், வைண்டிங் சுவர், மேசை மணிக்கூடுகள். றேடியோக்கள் உதிரிப்பாகங்களுக்காக வாங்கப்படும். டில்கா வாச் அன் றேடியோ வேக்ஸ்.284, ஆரியகுளம் சந்தி, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (சி/6633)

### விற்பனைக்கு

பலசரக்கு கடைகளுக்கேற்ற பாவித்த தளபாடங்கள் (அலுமாரிகள், சோக்கேஸ் றாக்கைகள், பட்டடைகள் மேசை) விற்பனைக்குஉண்டு. தொடர்பு செ. கோபாலகிருஷ்ணன், இரும்புத் தொழிற்சாலை, சங்கானை. (4954)

### தவறிவிட்டது

ஹூர்து சிங்காரம் ஸ்ரீபன் கிளமென்ற் அவர்களின் அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் றிக்கோ ஹோட்டலில் ஒப்படைக்கவும். (4957)

### தவறிவிட்டது

இராசரெத்தினம் குகேந்திரன் என்பவரின் அடையாள அட்டை சண்டிலிப்பாய் சந்தியில் தவறிவிட்டது (இத்துடன் இரண்டு அடையாள அட்டைகளும் மண்மீட்புநிதி செலுத்திய ரசீதும் தவறிவிட்டது) கண்டு எடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்: சி. நடராசா

வறிய மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்காக
விடுதலைப் புலிகளின்
மாணவர் அமைப்பு நடாத்தும்

## கலை நிகழ்ச்சி

கல்விக்கோட்டம் - தீவகம்

நடைபெறும் இடம்:
யாழ். வைத்தீஸ்வர கல்லூரி
காலம்: 25. 05. 93 செவ்வாய் (இன்று)
நேரம்: பிற்பகல் 6. 30 மணி

நுழைவுச் சீட்டுக்களை மண்டபவாயிலில் பெற்றுக் கொள்ளலாம்.

அன்பளிப்பு: 5 ரூபா – 10 ரூபா

அனைவரது ஆதரவினையும் அன்புடன் வேண்டுகிறோம்.

(4952)

உ
சிவமயம்

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேஷ்டி அழைப்பும்



அமரர் உயர்திரு.
**வீரகத்தி கணபதிப்பிள்ளை வல்லிபுரம்** அவர்கள்

பூவுலகில்: 26. 01. 1926 விண்ணுலகில்: 25. 04. 1993


விடுதலைப்புலிகள்

# வெளிநாட்டு இராணுவமாக இருந்தால் வேறு விடயம்

## 'இந்து'வுக்கு ஜனாதிபதி பேட்டி

(கொழும்பு)

நிச்சயமாக எமது நாட்டில் சிங்களவர்கள்தான் பெரும் பான்மையாக உள்ளனர். அங்கு சிறுபான்மையினரும் உள்ளனர். அவர்களுடைய உரிமைகளை வழங்குவதற்காக நாம் செயற்பட்டுள்ளோம். நாடு இரண்டாகப் பிரிக்கப்படுவதை அனுமதியோம் அது சாத்தியமற்றது. அதனை அனுமதித்தால் எந்த அரசும் வெற்றி பெற முடியாது. இவ்வாறு ஜனாதிபதி விஜயதுங்கா இந்துப்பத்திரிகைக்கு அளித்துள்ள பேட்டியில் தெரிவித்துள்ளார்

அப்பேட்டியில் அவர்மேலும் தெரிவித்ததாவது; விடுதலைப் புலிகள் ஒரு தீர்வுத் திட்டத்தைக் கேட்கவில்லை. நாம் எவ்வாறு அதனை வழங்க முடியும் எமது இராணுவம் சட்டபூர்வமானது.விடுதலைப் புலிகள் ஒரு வெளிநாட்டு இராணுவமாக இருந்தால் அது ஒரு வித்தியாசமான விடயம் என்றார்.

நிர்வாக முறையில் மாற்றங்கள் குறித்து ஜனாதிபதியிடம் கேட்கப்பட்டபோது நாம் பாராளுமன்றத் தேர்தலை நடத்தி பின்னர் பாராளுமன்றத்திலிருந்து ஜனாதிபதியைத் தெரிவு செய்ய முடியும். நாம் சகல வழிகளையும் ஆராய வேண்டும் என்று கூறினார்.

திருமதிஹேமாபிரேமதாசா அண்மையில் செய்த அறிவிப்பு தொடர்பாக வினவப்பட்ட போது இவ்வாறான அறிவிப்புகளை மேற்கொள்ள மரணச்சடங்கு ஒரு சரியான இடமல்ல. எனவே இதையிட்டு நாம் கவனம் செலுத்தவில்லை. அடிமட்டத்திலிருந்து வந்து ஐ தே. கவில் இணைந்து அதற்காக அவர் வேலை செய்யும் போது அதனை நாம் கவனிப்போம் என்றார். விஜயதுங்கா.

நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சிமுறை பற்றி அவர் கருத்து வெளியிடுகையில்: இவ்வாறான ஓர் அதிகாரம் எனக்குத் தேவையில்லை. நான் நவீனப் படுத்தலில் நம்பிக்கை கொண்டுள்ளேன் என்றார்.

அடுத்து வரும் 18 மாத காலப்பகுதியில் எதிர்க்கட்சிகள் ஆக்கபூர்வமான விதத்தில் இணைந்து செயற்பட முடிந்தால் இலங்கையில் முக்கிய தீர்மானங்களை மேற்கொள்ளவும் முக்கிய அடிகளை எடுத்து வைக்கவும் கூடியதாக இருக்கும் என இந்து கருத்து தெரிவித்துள்ளது

## ஆதரவற்ற பெண்களுக்கு கெயர் உதவி

[தொல்புரம்]

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இராணுவ வன்முறைகளினாலும், விபத்துக்களினாலும் உழைப்பாளரை இழந்து ஆதரவற்று அல்லலுறும் பெண்களுக்கு உதவும்முகமாக ''கெயர் இன்ரர் நாஷனல்'' நிறுவனம் பெரியதோர் திட்டத்தினைச் செயற்படுத்தவுள்ளது.

இவ்உதவித் திட்டம் வடக்குக் கிழக்கில் விரைவில் செயற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதெனவும், இந்த உதவிக்கென சுமார் 120 கோடி ரூபா [இலங்கை நாணயப்படி] பணத்தினைக் கெயர் ஸ்தாபனம் தனது நிதியிலிருந்து ஒதுக்கியுள்ளது எனவும் தெரிய வருகிறது. [41]

## எரிபொருள் விற்பனை மோசடி செய்தவர் கைது

எரிபொருள் அளக்கும் பிழையான அளவு கான் வைத்திருந்து மக்களைஏமாற்றும்போலி வியாபாரி ஒருவரை சாவகச்சேரி காவல்துறையினர் கைது செய்தனர்.

சென்ற கிழமை கனகம் புளியடி சந்தியில் உள்ள ஒரு மண்ணெண்ணெய்க்கடை ஒன்றில் மக்களுக்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் வழங்கிய நியாய விலையிலான மண்ணெண்ணெயை இக்கடை உரிமையாளர் குறித்த விலை ஒன்றிற்கு வாங்கியுள்ளார். இவர் வாங்கும்போது எண்ணெயை அளக்கும் அளவு கோலின் கொள்ளளவு பெரிதாக இருந்ததையிட்டு மக்கள் காவல்துறையினருக்கு புகார் செய்ததையடுத்து இவரை உடன் காவல்துறையினர் கைது செய்து பின்பு குற்றப் பணம் அறவிட்டனர். (86)

அனுமதியின்றி

## மாட்டிறைச்சி விற்ற வியாபாரிகள் சிக்கினர்

(தென்மராட்சி)

சுகாதார அதிகாரியின் அனுமதியின்றி கடைகளில் மாட்டிறைச்சி விற்ற வியாபாரிகள் ... இக்கடைக்காரர்கள் அனுமதியை அத்துமீறி இறைச்சியை விற்றதால் இருவரை உடன் பிடித்து காவல்துறையினர்

### முத்திரை தட்டுப்பாடு

[தொல்புரம்]

குடாநாட்டிலுள்ள தபால் கந்தோர்களில் மீண்டும் முத்திரைகளுக்குத் தட்டுப்பாடு நிலவி வருகிறது.

அநேகமாக சில தபால் அலுவலகங்களில் ஒரு ரூபாய் முத்திரைகளே காணப்படுகின்றன. பெறுமதி கூடிய முத்திரைகளுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது. [41]

### கோஷ்டி மோதல்

(தொல்புரம்)

சுழிபுரம் குடாக்கனை எனும் இடத்தில் ஏற்பட்ட கோஷ்டி மோதலில் இருவர் படுகாயமுற்ற நிலையில் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப் பட்டனர்.

இச் சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது: கடந்த வெள்ளி அன்று இரவு நேரத்தில் வாசிகசாலைக்கு கல்லெறிந்த விடயமாக இரு கோஷ்டிகளுக்கு இடையே வாய்த்தர்க்கம் ஏற்பட்டுக் கோஷ்டி மோதலாக மாறி பொல்லடியுடன் கத்தி வெட்டில் முடிந்தது. (41)

### இவான்ஸ் பிரிட்டனுக்கு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் பத்திரிகைச் செயலாளர் இவான்ஸ் கூரே பிரிட்டனில் உள்ள சிறிலங்கா தூதரகத்தில் கவுன்ஸிலராக பதவி ஏற்றுள்ளார்.

## கட்சி ஆதரவாளர் சுட்டுக் கொலை

(கொழும்பு)

ரம்புகணை பகுதியில் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி ஆதரவாளர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார். இச் சம்பவம் தொடர்பாக மற்றுமொரு கட்சியின் வேட்பாளர் ஒருவரையும் தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்த வேட்பாளர் ஒருவரையும் பொலிஸார் தேடி வருகின்றனர்.

கொல்லப்பட்டவர் இப்பகுதியில் ஐ ஐ தே. மு வெற்றி பெற அயராது உழைத்தவர் எனக் கூறப்படுகிறது.

## ஸ்கொட்லண்ட் யார்ட் விசாரிக்க முடியாது

### வெளத்தபிக்கு கூறுகிறார்

(கொழும்பு)

சிறிலங்காவில் நடைபெற்ற கொலையை ஸ்கொட்லண்ட் யார்ட் துப்பறியும் பிரிவினர் விசாரணை நடத்த வேண்டியதில்லை என களனி பல்கலைக் கழக துணைவேந்தர் வல்பொல ராகுல தேரர் தெரிவித்துள்ளார். இது எமது பொலிசை பொறுத்த விடயம் என்றும் அவர் தெரிவித்தார்.

நாடு இன்று மிகவும் மோசமான நிலையில் உள்ளது இதை அனைவரும் உணர்ந்து செயற்பட வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்தார்.

### குடாநாட்டில் மழை

குடாநாட்டில் நெடு நாட்களாக பெய்யாதிருந்த மழை கடந்த சில நாட்கள் பரவலாகக் குடாநாடெங்கும் இடியுடன் கூடிய மழை பெய்துள்ளது. (41)


## நினைவு கூருகின்றோம் ...

சங்கானை. (4954)

### தவறிவிட்டது

லூர்து சிங்காரம் ஸ்ரீபன் கிளமென்ற் அவர்களின் அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் றிக்கோ ஹோட்டலில் ஒப்படைக்கவும். (4957)

### தவறிவிட்டது

இராசரெத்தினம் குகேந்திரன் என்பவரின் அடையாள அட்டை சண்டிலிப்பாய் சந்தியில் தவறிவிட்டது (இத்துடன் இரண்டு அடையாள அட்டைகளும் மண்மீட்புநிதி செலுத்திய ரசீதும் தவறிவிட்டது) கண்டு எடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்: சி. நடராசா கல்வளை வீதி, சண்டிலிப்பாய். (4958)

### மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி வடநகர்க் கொத்தணிப் பாடசாலைகளின் மெய்வல்லுநர் போட்டிகள் - 1993 சாவகச்சேரி இந்துக் கல்லூரி மைதானத்தில் கொத்தணி அதிபர் க. சந்திரசேகரா தலைமையில் கடந்த புதன், வியாழன் ஆகிய தினங்களில் நடைபெற்றுள்ளன.



அமரர் உயர்திரு.

## வீரகத்தி கணபதிப்பிள்ளை வல்லிபுரம் அவர்கள்

| பூவுலகில்: | விண்ணுலகில்: |
|---|---|
| 26. 01. 1926 | 25. 04. 1996 |

அகத்தொளிர் தலைவரென அருஞ்சா தனைபலவாய்ப் புகழுடல் நிறுவி விட்டுப் புகுதியே எமைப்பிரிந்தே!

மாதமொன்று ஆகுதையா மகிழ்முகத்தில் நாம்விழித்துப் பாதமது தனிலெமது பரிந்துருகும் அஞ்சலிகள்!


அமரரின் அந்தியேஷ்டிக் கிரியைகளும் சபிண்டீகரணமும் இன்று 25.05 93 இல் நிகழும். அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம.

''வேல் அகம்''
குருக்கட்டு
கரணவாய் தெற்கு,
கரவெட்டி.
25. 05. 93


இங்ஙனம்
அமரரின். குடும்பத்தினர்

(4910)

## காணவில்லை



ஜெயவீரசிங்கம் சிவகுமார்



சரவணபவன் கோகிலா

இடம் பெயர்ந்து வந்து எம்முடன் தங்கியிருந்த தெல்லிப்பழையைச் சேர்ந்த ஜெயவீரசிங்கம் (மகன்) சிவகுமார். (வயது 21). சுதுமலை தெற்கை பிறப்பிடமாகக் கொண்ட சரவணபவன் (மகள்) கோகிலா (வயது 16) கல்விகற்கும் மாணவி ஆகிய இருவரையும் கடந்த சித்திரை மாதம் 18 04-1993லிருந்து காணவில்லை இவ்விருவரையும் கண்டால் பொதுமக்களாகிய நீங்கள் அருகிலுள்ள காவல் நிலையத்திற்கோ அல்லது கீழ் குறிப்பிடும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

இருவரையும் பற்றிய தகவல் தருவோருக்கு சன்மானம் வழங்கப்படும்.

ஜெயவீரசிங்கம்
கனகேஸ்வரி
கரன்றேடிங் சென்றர், யாழ்ப்பாணம்.

மாப்பியன் மில்லேன்,
சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.

(4953)

எரிபொருள் அளக்கும் பிழையான அளவு கான் வைத்திருந்து மக்களைஏமாற்றும்போலி வியாபாரி ஒருவரை சாவகச்சேரி காவல்துறையினர் கைது செய்தனர்.

சென்ற கிழமை கனகம் புளியடி சந்தியில் உள்ள ஒரு பண்ணெண்ணெய்க்கடை ஒன்றில் மக்களுக்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் வழங்கிய நியாய விலையிலான மண்ணெண்ணெயை இக்கடை உரிமையாளர் குறித்த விலை ஒன்றிற்கு வாங்கியுள்ளார். இலர் வாங்கும்போது எண்ணெயை அளக்கும் அளவு கோலின் கொள்ளளவு பெரிதாக இருந்ததையிட்டு மக்கள் காவல்துறையினருக்கு புகார் செய்ததையடுத்து இவரை உடன் காவல்துறையினர் கைது செய்து பின்பு குற்றப் பணம் அறவிட்டனர். (86)

அனுமதியின்றி

## மாட்டிறைச்சி விற்ற வியாபாரிகள் சிக்கினர்

(தென்மராட்சி)

சுகாதார அதிகாரியின் அனுமதியின்றி கடைகளில் மாட்டிறைச்சி விற்ற வியாபாரிகள் சாவகச்சேரி காவல்துறையினரிடம் அகப்பட்டனர்.

கடந்த வாரம் மட்டுவில் தெற்கு, மட்டுவில் வடக்கு, மகிழடி போன்ற இடங்களில் இக்கடைக்காரர்கள் அனுமதியை அத்துமீறி இறைச்சியை விற்றதால் இருவரை உடன் பிடித்து காவல்துறையினர் தமது பாதுகாப்பில் வைத்துள்ளனர்.

இதுபோன்று மீறுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுவதாக காவல்துறையினர் கூறினார்கள். (86)

## ஒரு பாடசாலையில் ஆறு அதிபர்கள்

யாழ்ப்பாணம் சன்மார்க்க மகா வித்தியாலயத்தில் இயங்கிவரும் காரைநகர் கலாநிதி ஆ. தியாகராசா மத்திய மகா வித்தியாலயத்தில் ஆறு நிரந்தர அதிபர்கள் கடமையாற்றி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

காரைநகரில் இருந்து இடம் பெயர்ந்து யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் அறுநூறு மாணவர்கள் இந்த வித்தியாலயத்தில் கல்வி கற்பதாகவும் காரைநகரைச் சேர்ந்த ஆறு நிரந்தர அதிபர்கள் இங்கு கடமையாற்றுவதாகவும் காரைநகர் கொத்தணி அதிபர் திரு. செ. தேவதாசன் தெரிவித்தார்.

முதலாம் தர அதிபர் ஒருவருக்குக் கீழ் இரண்டாம். மூன்றாம் தர அதிபர்கள் ஐந்து பேர் இருப்பதாகவும் இவர்கள் அனைவரும் புதிதாக நிரந்தர நியமனம் பெற்றவர்கள் எனவும் குறிப்பிட்டார்.

## பாம்பு தீண்டியதில் காளைமாடு மரணம்

மாதகலில் இருந்து இடம் பெயர்ந்து வந்து வட்டுக்கோட்டை மேற்கில் தங்கியிருந்த அதிபர் ஒருவரின் பல ஆயிரம் ரூபா பெறுமதியான காளை மாடு ஒன்று நாகம் தீண்டியதால் மரணமானது

அதிபர் மாலை வயலில் இருந்து தமது காளை மாடுகள் இரண்டையும் வீட்டுக்குக் கொண்டு வரும் போது நாகம் ஒன்று தீண்டியதனால் இரத்தம் கக்கிய காளை மாடு அன்று இரவு மரணமானதாகக் கூறப்படுகிறது.

## சிறுவர்களுக்கு பால்மா விநியோகம்

யாழ் - மறைவட்ட மனித முன்னேற்ற நடுநிலையம் (கியூடெக்) ஐந்து வயதுக்குட்பட்ட 16,304 சிறுவர்களுக்கு ஊட்டச்சத்துள்ள பால்மா வகைகளை வழங்கி வருகிறது.

குருநகர், உரும்பராய், சாவகச்சேரி, சில்லாலை, உடுவில் (ஆர்க்) பண்டத்தரிப்பு, கோப்பாய், நவாலி, மாரீசன்கூடல், ஆசனக்கோவில், அடைக்கல நாயகி சந்தியோமையோர் பங்குகள் ஊடாக பால்மா வகைகளை நிலையம் மாதா மாதம் வழங்கிவருவதாக நிவாரணப் பிரிவு பொறுப்பாளர் திரு ஞா. அருளானந்தம் தெரிவித்தார். (21)

### சந்திரிகா அறிவிப்பு

மாகாண சபைக்கு அதிகளவில் அதிகாரங்கள் உள்ளன. அவற்றை சரியான முறையில் முழுமையாக பயன்படுத்த தான் எண்ணியுள்ளதாக மேல் மாகாணசபை முதல்வர் சந்திரிகா குமாரணதுங்கா தெரிவித்துள்ளார்.

ஒருவரையும் தேர்தலில் போட் எனக் கூறப்படுகிறது.

## ஸ்கொட்லண்ட் யார்ட் விசாரிக்க முடியாது

### வெளத்தபிக்கு கூறுகிறார்

(கொழும்பு)

சிறிலங்காவில் நடைபெற்ற கொலையை ஸ்கொட்லண்ட் யார்ட் துப்பறியும் பிரிவினர் விசாரணை நடத்த வேண்டியதில்லை என களனி பல்கலைக்கழக துணைவேந்தர் வல்பொல ராகுல தேரர் தெரிவித்துள்ளார். இது எமது பொலிசை பொறுத்த விடயம் என்றும் அவர் தெரிவித்தார்.

நாடு இன்று மிகவும் மோசமான நிலையில் உள்ளது இதை அனைவரும் உணர்ந்து செயற்பட வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்தார்.

### குடாநாட்டில் மழை

குடாநாட்டில் நெடு நாட்களாக பெய்யாதிருந்த மழை கடந்த சில நாட்கள் பரவலாகக் குடாநாடெங்கும் இடியுடன் கூடிய மழை பெய்துள்ளது. (41)

## நினைவு கூருகின்றோம் ...
## 1993-05-25

1987 ஆம் ஆண்டு இதே தினத்தில் அம்பாறை-சாகாமம் பகுதியில் சிறிலங்கா அதிரடிப்படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**2-ம் லெப். ரமேஸ்** (சி.லோகநாதன்-அக்கரைப்பற்று--அம்பாறை)

திருமலை-தம்பலகாமம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய,

★ **சுரேஸ்/சுந்தர்** (திருநாமம் மகாலிங்கம்-முள்ளிப்பொத்தானை-திருமலை)

1988ஆம் ஆண்டு யாழ்-ஏழாலையில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

கோண்டாவில் பிரதேசப்பொறுப்பாளர்,

**அப்பன்** (கனகரட்ணம் பிரபாகரன்-பிரபாகரன் வீதி, நெட்டிலிப்பாய், கோண்டாவில்,-யாழ்)

யாழ் பருத்தித்துறைப்பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**ஒஸ்ரின்** (கணேசன் இளங்கோவன்-தும்பளை, பருத்தித்துறை - யாழ்)

1989 ஆம் ஆண்டு செம்பிமலையில் இந்தியப்படையினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய,

**2-ம் லெப். றெஜினோல்ட்** (கிருஷ்ணன் வசீகரன் –திருமலை)

மாவிட்டபுரத்தில் தேசவிரோத சக்திகளினால் அடித்துக் கொலைசெய்யப்பட்ட எமது ஆதரவாளர்,

**பாலு** (சபாபதி பாலசிங்கம்)

1990 ஆம் ஆண்டு அம்பாறை-காரைதீவுப் பகுதியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் எமைப் பிரிந்த.

**சுந்தர்/சந்தர்** (அகமட்லெப்பை செயலால்தீன்-பள்ளிவாசல் வீதி, வேப்பானைச்சேனை)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

★ மேற்குறிப்பிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

## தமிழீழ விடுதலைப் புலிகள்

(சி-6678)

நல்லூர் இளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

சிந்தனைக்கு

பேனுக்கும் தெள்ளுப் பூச்சிக்கும் இடையில் எது உயர்ந்தது என்ற பேச்சுக்கு இடமில்லை.
- சேமியல் ஜோன்சன்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 25-05-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05

## பழையவருக்குப் புதிய நியமனம்

ஸ்ரீலங்காவின் புதிய ஜனாதிபதி மேற்கொண்டுள்ள களை எடுப்புக்கள், இடமாற்றங்கள், புதிய நியமனங்கள் வரிசையில் ஜெனரல் சேபால ஆட்டிக்கலவின் புதிய நியமனம் கணிசமான முதன்மையைப் பெறுகின்றது இராணுவ சேவையில் இருந்து ஓய்வுபெற்று இராஜதந்திர சேவையில் இருந்தவரை மீண்டும்இராணுவசேவையுடன் நெருங்கிய தொடர்புடைய பதவிக்கு புதியஜனாதிபதி நியமித்துள்ளார்.

ஜெனரல் சேபால ஆட்டிக்கல சிறிலங்காவிலுள்ள மூத்த இராணுவ அதிகாரியாவார். ஒரே ஒரு ஐந்து நட்சத்திர ஜெனரலுமாவார். இரண்டாம் உலக மகா யுத்த காலத்திலேயே இராணுவ சேவையில் இணைந்த ஜெனரல் ஆட்டிக்கல, சிறிலங்காவின் இராணுவத் தளபதியாக பத்து ஆண்டுகள் பதவி வகித்ததோடு, பாதுகாப்பு அமைச்சின் மேலதிகச் செயலாளராகவும், செயலாளராகவும் இருந்தவராகும். இறுதியில் பிரிட்டனுக்கான தூதுவராகப் பதவி வகித்தவராவார்.

ஜெனரல் சேபால ஆட்டிக்கலவின் நியமனம், பல்வேறு ஊகங்களுக்கு வழி வகுப்பதற்கு ஏதுவாக இருக்கின்ற போதும் அடிப்படையில், இந் நியமனம் சிறிலங்கா ஜனாதிபதியின் தேவை குறித்தும், சிறிலங்கா இன்றைய இராணுவ நிலை குறித்தும் முக்கியமானதாகும்.

சிறிலங்கா ஜனாதிபதியைப் பொறுத்து அவர் முன்னர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சராகச் சிறிது காலம் இருந்திருப்பினும் இதில் பெரும்புகழ் பெற்றவரல்ல. இதேவேளை, தற்பொழுது முப்படைகளின் தளபதியும், பாதுகாப்பு அமைச்சரும் என்ற நிலையில் முன்னைய நிலையை விடப் பெரும் பொறுப்புக்கள் அவர் தலையில் சுமத்தப்பட்டிருப்பதால், அவருக்கு ஒரு நம்பிக்கையான, அதேவேளை அனுபவசாலியான ஒருவர் தேவைப்படுவதில் ஆச்சரியம் எதுவுமில்லை.

அடுத்ததாகச் சிறிலங்கா இராணுவ இயந்திரம் கடந்த காலத்தில் ஏற்பட்ட பெரும் இழப்புக்களால் பெரிதும் குழம்பிப் போயுள்ள . 'புகழ் பூத்த' தளபதிகளையும், அவற்றிற்கான அரசியற் தலைமைகளையும் இழந்து போயுள்ள இராணுவத்தைப் புனரமைப்பது என்பது மிகவும் கடினமான பணியே ஆகும்.

பனை உற்பத்திகளை

# சந்தைப்படுத்துவதற்கான வாய்ப்புகள் குறைகின்றது

### ஆணையாளர் கவலை

பனைவெல்ல உற்பத்திகளை அதிகமாக சந்தைப்படுத்தும் வகையில் பாவனையாளர்களது உணவுப்பங்கீட்டில் தொடர்புள்ள தனியார், அரச, கூட்டுறவு நிறுவனங்கள் இதுவரை கவனம் செலுத்தாதது குறித்துபனைஉற்பத்தி சார்ந்த தொழிலாளர்கள் கவலை கொண்டுள்ளதாக பனம்பொருள்கூ. அ. உ. ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள செய்திக்குறிப் பொன்றில் இறக்குமதி பொருளாதாரத்தின் மோகத்திலிருந்து விடுவிப்பதற்கு பல முயற்சிகள் எடுக்கப்பட்டும் பெறுபேறு உற்சாகமற்றுத்தான்இருக்கின்றது. சுதேசியப் பொருள்களின் பெருமைகளை பெருமையடித்துக்கொள்ளும் நாம் வாழ்க்கை முறைமையில் இவ் உற்பத்திகளை ஆதரிக்க இன்னும் ஏன் தயாராகவில்லை? எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

குடாநாட்டில் பனை வள உற்பத்திகளுடன் நேரடியாக தொடர்பு கொண்ட தெங்கு பனம் பொருள் கூட்டுறவு சங்கங்கள் வசதிகள் குறைந்த இச்சூழ்நிலையிலும் தமது முயற்சியை பிரயோகித்து மக்களுக்கான உணவுப்பொருளான பனைவெல்லத்தை உற்பத்தி செய்து தேக்கி வைத்துள்ளனர். இந்த உற்பத்திகள் சந்தைப்படுத்தப்படுவதற்கு உறுதுணை புரியக்கூடிய பல நிறுவனங்கள் மூலமாக முயற்சிகள் எடுக்கப்பட்டும் அவை பலன்தருவதாக இல்லை.

தெங்கு பனம்பொருள் கூட்டுறவு சங்கங்கள் தம்வசமிருந்த நிதிவளங்களை இந்த உற்பத்திக்குள் புகுத்தி லட்சக்கணக்கான முதலீடுகளைதிரும்பப்பெற முடியாத அவலநிலைக்கு தள்ளப்பட்டுள்ளன என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எதிர்காலத்திலும் உள்ளூர் உற்பத்திகளை முடங்க வைக்கும் காரணிகளை களைய இம்மண்ணிலுள்ள சகல தரப்பினரும் முன்வரவேண்டும் என்றும் அச்செய்திக்குறிப்பில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது

தென்மாகாண நிர்வாகத்திற்கு

## எதிரணி ஆதரவு தரும் முதலமைச்சர் நம்பிக்கை

[கொழும்பு]

தென் மாகாணசபை நிர்வாகத்தை எதிரணியினரது ஆதரவுடன் செயற்படுத்த முடியும் என தென் மாகாண சபை முதலமைச்சர் அமரசிறி நம்பிக்கை தெரிவித்துள்ளார். இதே சமயம் மேல் மாகாண சபையின் ஐ. தே. கட்சி நிர்வாகத்திற்கும் எதிரணியினர் ஆதரவளிக்க உறுதியளித்ததாக அரசகட்டுப்பாட்டிலுள்ள பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தென் மாகாணசபை வட மேல் மாகாணசபை முதலமைச்சர்களாக ஐ. தே. கட்சி வேட்பாளர்கள் முறைதவறி நியமிக்கப்பட்டுள்ளதாக தற்போது எதிரணியினர் போர்க்கொடி பிடித்துள்ளமை தெரிந்ததே.

ஜெனரல் கொப்பேகடுவ

# கொலை விசாரணை பகிரங்கமாக நடத்தப்படும்

(கொழும்பு)

ஜெனரல் டென்சில் கொப்பே கடுவவின் கொலை விசாரணை பகிரங்கமாக நடத்தப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வருடம் அராலித் துறையில் இடம்பெற்றகண்ணி வெடிச் சம்பவத்தில் சிக்கி ஜெனரல் டென்சில் கொப்பே கடுவ உட்பட பத்து சிறிலங்காவின் பாதுகாப்புப்படை உயர் அதிகாரிகள் பலியானது தெரிந்ததே.

... நாடுகளைச் சேர்ந்த மூன்று நீதிபதிகள் அடங்கிய குழு ஒன்று சிறிலங்காவிற்கு வந்துள்ளமை தெரிந்ததே.

சிறிலங்கா வந்துள்ள இக் குழு தமது விசாரணைகளை பகிரங்கமாகவே மேற்கொள்ளும் எனவும் விசாரணைகள் அனைத்தும் உடனுக்குடன் பத்திரிகைகள் மூலம் வெளியிடப்படும் எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## பயணிகள் அதிகரித்தமை படகு விபத்துக்கு காரணம்

### விசாரணைக்குழு அறிக்கை

(கொழும்பு)

மூதூர் படகு விபத்து அளவிற்கு அதிகமான பயணிகள் ஏற்றப்பட்டிருந்தமையே காரணம் என விசாரணை ஆணை...

...பெற்ற படகு விபத்து அளவுக்கதிகமான பயணிகள் ஏற்றப்பட்டிருந்தமையே முதல் காரணமென இந்த விபத்து பற்றிய அறிக்கை சமர்ப்பிக்க...

## இராணுவம் என்று அஞ்சி கிராமசேவகர் அலறினார்

### படப்பிடிப்பின்போது சம்பவம்

(யாழ்ப்பாணம்)

'இது எங்கள் தேசம்' படத்தின் ஒரு காட்சியை நாங்கள் படமாக்கிக் கொண்டிருந்தோம். அக்காட்சி வீதியால் வருவோர் போவோரை இந்திய இராணுவத்தினர் துன்புறுத்தும் காட்சி. இப் பாதையில் குறுக்குவழியால் வந்த ஒரு கிராமசேவகர் திடீரென இராணுவ உடையில் நிற்பவர்களை கண்டதும் இந்திய இராணுவம்தான் திரும்பவும் வந்துவிட்டதென நினைத்து தன்னை ஒன்றும் செய்ய வேண்டாமென குழறினார். இவ்வாறு படத்தை எடுக்கும்போது நடந்த சம்பவங்கள் பற்றி முல்லை மாவட்ட கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் சங்கர் தெரிவித்தார்.

# விருப்பு வாக்குத் தெரிவு புதிய அமைச்சு மீளாய்வு

சர்ச்சைக்குரிய விருப்பு வாக்கு தெரிவு, மற்றும் தேர்தல் சட்டங்களை அமைச்சர் சொக்ஸி மீளாய்வு செய்யவுள்ளார். புதிதாக அமைக்கப்பட்ட அரசியல் யாப்பு அமைச்சின் அமைச்சராக சொக்ஸி நியமிக்கப்பட்டது தெரிந்ததே தற்போதைய விருப்புத்தெரிவு முறை தேர்தல் சட்டங்கள் என்பவற்றை மீளாய்வு செய்வதே புதிய அரசியல் யாப்பு அமைச்சர் சொக்ஸியின் முதல் பணியாக இருக்கும் எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

மாகாணசபை தேர்தலை கண்காணிக்க வந்த சர்வதேச குழு தனது அறிக்கையில் விருப்பு வாக்குமுறை வாக்காளரைக் குழப்பத்தில் ஆழ்த்தியதாகவும் இதுகுறித்து மீளாய்வு செய்யும்படியும் சிபார்சு செய்திருந்தது.

## குருநாகல் மாடிவீட்டில் 17 குழந்தைகள் மீட்பு

(கொழும்பு)

குருநாகலில் ஆடம்பர மாளிகை ஒன்றிலிருந்து பசி வாட்டத்துடன் 17 குழந்தைகள் மீட்கப்பட்டுள்ளனர். குருநாகல் நகரமத்தியிலுள்ள இருமாடி ஆடம்பர பங்களாவிலிருந்து சனியன்று பொலிசார் 17 குழந்தைகளை மீட்டனர்.

இக் குழந்தைகள் ஒரு வயதுக்கும் 7 வயதுக்கும் இடைப்பட்ட வயதுடையவர்கள். இவர்கள் அங்கு மர்மமான முறையில் வைக்கப்பட்டிருந்ததாக பொலிசார் தெரிவித்தனர்.

இக் குழந்தைகளின் தாய்மார்களை வெளிநாட்டில் வேலை வாய்ப்பு பெற்றுக் கொடுத்தபின் அவர்களிடமிருந்து உரியபணம் வந்துசேரும் வரை இக்குழந்தைகள் பிணையாக வைக்கப்பட்டிருந்தனரா அல்லது குழந்தைகளை விற்பனை செய்யும் பண்ணையாக இது நடத்தப்பட்டதா என பொலிசார் விசாரித்து வருகின்றனர்.

## பாதுகாப்பு நிதிக்கு 28 கோடி ரூபா

(கொழும்பு)

சிறிலங்கா அரசின் தேசிய பாதுகாப்பு நிதிக்கு சுமார் 28 கோடி 60 லட்சம் ரூபா திரட்டப்பட்டுள்ளது. 1990 ஜூன் முதல் தேசிய பாதுகாப்பு நிதிக்கு பொதுமக்கள் கணிசமான அளவு நிதியுதவி அளித்ததாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

## அரச நிறுவன முறைகேடு விசாரணை நடக்கும்

(கொழும்பு)

அரச நிறுவனங்களில் கடந்த காலங்களில் இடம்பெற்ற...

...கூறப்படும் வீண்விரயம், துஷ்பிரயோகம் மற்றும் மோசடி...

நியமனம் சிறிலங்கா ஜனாதிபதியின் தேவை குறித்தும், சிறிலங்கா இன்றைய இராணுவ நிலை குறித்தும் முக்கியமானதாகும்.

சிறிலங்கா ஜனாதிபதியைப் பொறுத்து அவர் முன்னர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சராகச் சிறிது காலம் இருந்திருப்பினும் இதில் பெரும்புகழ் பெற்றவரல்ல. இதேவேளை, தற்பொழுது முப்படைகளின் தளபதியும், பாதுகாப்பு அமைச்சரும் என்ற நிலையில் முன்னைய நிலையை விடப் பெரும் பொறுப்புக்கள் அவர் தலையில் சுமத்தப்பட்டிருப்பதால், அவருக்கு ஒரு நம்பிக்கையான, அதேவேளை அனுபவசாலியான ஒருவர் தேவைப்படுவதில் ஆச்சரியம் எதுவுமில்லை.

அடுத்ததாகச் சிறிலங்கா இராணுவ இயந்திரம் கடந்த காலத்தில் ஏற்பட்ட பெரும் இழப்புக்களால் பெரிதும் குழம்பிப் போயுள்ள . 'புகழ் பூத்த' தளபதிகளையும், அவற்றிற்கான அரசியற் தலைமைகளையும் இழந்து போயுள்ள இராணுவத்தைப் புனரமைப்பது என்பது மிகவும் கடினமான பணியே ஆகும்.

மேலும் சிறிலங்கா இராணுவத் தளபதிகளுக்குள் உள்ள கருத்து மோதலும், பாதுகாப்பு அமைச்சு மட்டத்திலுள்ள - அதாவது தளபதிகள் அமைச்சின் செயலாளர்கள் – முரண்பாடுகளும் தீர்க்கப்பட வேண்டிய உடனடி அத்தியாவசிய தேவைகளாகவுள்ளன. அத்தோடு, முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் காலத்தில், மேற்கொள்ளப்பட்டிருந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் கலைக்கப்பட்டு வருகின்றமையும், அதனால் ஏற்படும் நெருக்கடிகள், வெற்றிடங்கள் என்பன நிறைவு செய்ய வேண்டிய தேவையும் எழுந்துள்ளன.

இவ்வாறான பாதுகாப்புத் தொடர்பாக பல்வேறு பிரச்சினைகள் உள்ளன. இதேவேளை. தற்பொழுது இராணுவத்திலோ அன்றி பாதுகாப்பு அமைச்சிலோ இவற்றைச் சீர் செய்யக் கூடியவர்கள் இருக்கின்றார்களா என்பது சந்தேகமே. அவ்வாறு இருப்பினும் அவர்களுக்கு நியமனங்கள் வழங்கப்படும் பட்சத்தில் மேலும் முரண்பாடுகளும், மோதல்களும் தீவிரமடையுமே ஒழிய, பிரச்சினை தீரப்போவதில்லை.

இந்நிலையில், ஜெனரல் சேபால ஆட்டிக்கலவின் நியமனம் முதலில் இராணுவத்தைச் சீர் செய்யும் முக்கிய நோக்கம் கொண்டது. இன்றுள்ள தளபதிகள் யாவரும் ஜெனரல் ஆட்டிக்கலவிற்கு கீழ் கடமை புரிந்தவர்கள். அவரின் தரத்திற்குக் கீழ்ப்பட்டவர்கள். அத்தோடு, ஜெனரல் சேபால ஆட்டிக்கல சிறந்த நிர்வாகி எனப் பெயரும் பெற்றவர். ஆகையினால், இப்புனரமைப்பு வேலைகள் சேபால ஆட்டிக்கலவால் ஓரளவு சாத்தியமாகும் என்றே கருதப்படுகின்றது.

இதேவேளை ஜெனரல் சேபால ஆட்டிக்கலவின் நியமனம் அடுத்த கட்ட இராணுவ நடவடிக்கையைத் துரிதமாக்குமா? அன்றி உடனடிச் சீரமைப்பிற்கு மட்டும் தானா என்பது குறித்து உடன் எதையும் கூறிவிட முடியாது. ஏனெனில் ஜெனரல் ஆட்டிக்கல புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் பங்காற்றியுள்ள அதேவேளை புலிகளுடனான பேச்சு வார்த்தைகளின் போதும் சேவை புரிந்தவர். இந்நிலையில்அடுத்த கட்ட நடவடிக்கை போரா, சமாதானமா என்பதை ஜனாதிபதியே முடிவு எடுக்கவேண்டும். இதில், ஜனாதிபதியின் பேச்சுக்கள் போரையே அதிகம் நாடி நிற்பதாகத் தெரிகின்றது.

# பகிரங்கமாக நடத்தப்படும்

(கொழும்பு)

ஜெனரல் டென்சில் கொப்பே கடுவவின் கொலை விசாரணை பகிரங்கமாக நடத்தப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வருடம் அராலித்துறையில் இடம்பெற்றகண்ணி வெடிச் சம்பவத்தில் சிக்கி ஜெனரல் டென்சில் கொப்பே கடுவ உட்பட பத்து சிறிலங்காவின் பாதுகாப்புப்படை உயர் அதிகாரிகள் பலியானது தெரிந்ததே.

இக்கொலை தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளும் பொருட்டு காமன்வெல்த் அமைப்பைச் சார்ந்த கானா, நைஜீரியா, நியூசிலாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்த மூன்று நீதிபதிகள் அடங்கிய குழு ஒன்று சிறிலங்காவிற்கு வந்துள்ளமை தெரிந்ததே.

சிறிலங்கா வந்துள்ள இக் குழு தமது விசாரணைகளை பகிரங்கமாகவே மேற்கொள்ளும் எனவும் விசாரணைகள் அனைத்தும் உடனுக்குடன் பத்திரிகைகள் மூலம் வெளியிடப்படும் எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## பயணிகள் அதிகரித்தமை படகு விபத்துக்கு காரணம்

### விசாரணைக்குழு அறிக்கை

(கொழும்பு)

மூதூர் படகு விபத்து அளவிற்கு அதிகமான பயணிகள் ஏற்றப்பட்டிருந்தமையே காரணம் என விசாரணை ஆணையாளரின் அறிக்கை சிறிலங்கா ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப் பட்டது.

கடந்த ஜனவரி மாதம் 26 ஆம் திகதி மூதூரில் இடம் பெற்ற படகு விபத்து அளவுக்கதிகமான பயணிகள் ஏற்றப்பட்டிருந்தமையே முதல் காரணமென இந்த விபத்து பற்றிய அறிக்கை சமர்ப்பிக்க நியமிக்கப்பட்ட ஜி. எல். எஸ். எம்.டி சில்வா கமிஷன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

17 குழந்தைகளை மீட்டனர்.

இக் குழந்தைகள் ஒரு வயதுக்கும் 7 வயதுக்கும் இடைப்பட்ட வயதுடையவர்கள். இவர்கள் அங்கு மர்மமான முறையில் வைக்கப்பட்டிருந்த யாக வைக்கப்பட்டிருந்தனரா அல்லது குழந்தைகளை விற்பனை செய்யும் பண்ணையாக இது நடத்தப்பட்டதா என பொலிசார் விசாரித்து வருகின்றனர்.

## பாதுகாப்பு நிதிக்கு 28 கோடி ரூபா

(கொழும்பு)

சிறிலங்கா அரசின் தேசிய பாதுகாப்பு நிதிக்கு சுமார் 28 கோடி. 60 லட்சம் ரூபா திரட்டப்பட்டுள்ளது. 1990 ஜூன் முதல் தேசிய பாதுகாப்பு நிதிக்கு பொதுமக்கள் கணிசமான அளவு நிதியுதவி அளித்ததாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

## அரச நிறுவன முறைகேடு விசாரணை நடக்கும்

(கொழும்பு)

அரச நிறுவனங்களில் கடந்த காலங்களில் இடம்பெற்ற முறைகேடுகள் குறித்து விசாரணைகள் நடாத்தப்படவுள்ளன.

அரச நிறுவனங்களில் கடந்த காலங்களில்நிகழ்ந்ததாகக் கூறப்படும் வீண்விரயம், துஷ்பிரயோகம் மற்றும் மோசடிகள் குறித்து விசாரணைகள் மேற்கொள்வது தொடர்பாக நடவடிக்கைகளை சிறிலங்கா அரசு எடுத்து வருவதாக கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

## நான் கூறியது உண்மை ஜெயலலிதா வலியுறுத்து

[சென்னை]

விடுதலைப் புலிகள் அமைப்புடன்பேச்சு வார்த்தை நடத்தக்கூடிய சாத்தியங்கள் பற்றி மத்திய அமைச்சர் சவான் தன்னிடம் பேசியதாகத் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

முன்னதாக இக்கருத்தை ஜெயலலிதா வெளியிட்ட போது இதை அமைச்சர் சவான் உடனடியாக மறுத்து அப்படித் தாம் ஏதும் கூறவில்லை என மறுப்புத் தெரிவித்திருந்தார்.

எனினும் மீண்டும் ஜெயலலிதா சவான் தன்னிடம் விடுதலைப்புலிகளுடன் பேச்சு நடத்துவது குறித்துப் பேச்சுக்கள் நடத்தினார் என வலியுறுத்தினார். தான் கூறியது உண்மைதான் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

## தி.மு.க.அரசைப் போன்றே அ.தி.மு.கவும் செயற்படுகிறது

### ஜி.கே. மூப்பனார் தெரிவிப்பு

(சென்னை)

விடுதலைப்புலிகளைப் பொறுத்த வரை முன்னாள் தி. மு.க. அரசு எந்தப்போக்கை மேற்கொண்டிருந்ததோ அதேபோக்கைத்தான் இப்போதைய அ. தி மு. க. அரசும் மேற்கொண்டுவருவதாக மூத்தகாங்கிரஸ் பிரமுகர் ஜி. கே. மூப்பனார் கூறினார்.

கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக தமிழகத்தில் காங்கிரஸ் அல்லாத அரசுகளின் செயல்களுக்கு மத்திய அரசு மீது பழிபோடப்படுகிறது என அவர் குற்றஞ்சாட்டினார்.

## ஜனாதிபதி ஆட்சியை அமுல் படுத்துக

### சுப்பிரமணியசுவாமி தெரிவிப்பு

(டில்லி)

தமிழகத்தில் 2 மாதங்களுக்கு ஜனாதிபதி ஆட்சி அமுல் செய்யவேண்டும் என சுப்பிரமணிய சுவாமி கூறியுள்ளார். டில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் தமிழகத்தில் சட்டம், ஒழுங்கு சீர்குலைந்து விட்டது பயங்கரம் எங்கும் நிலவுகிறது, விசாரணைக்காக வைக்கப்பட்ட தடா கைதிகள் சிறையில் இருந்து ஓடுகின்றனர் என்றும் அவர் கூறினார்.

மத்திய அரசு இதை உன்னிப்பாக கவனித்து தகுந்த முடிவை தாமதமின்றி எடுக்க வேண்டும். சரிந்துவரும் சட்டம் ஒழுங்கு சீர்குலைவைத் தடுக்க ஜனாதிபதி ஆட்சி பிரகடனம் செய்யவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

# ஆளுநர் இராஜினாமாவை தலைவர்கள் வரவேற்பு

[சென்னை]

தமிழக ஆளுநர் பிஷ்மன் நாராயண்சிங்கின் ராஜினாமா துரதிர்ஷ்டவசமானது எனத் தமிழக காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி கருத்துத் தெரிவித்தார். எனினும் புதிய ஆளுநராக டாக்டர் சென்னா ரெட்டி நியமிக்கப்பட்டது வரவேற்கத்தக்கது என்றும் அவர் கூறினார்.

ஆளுநர் பீஷ்மன் நாராயண் சிங் இராஜினாமா செய்ததை காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் திண்டிவனம் ராமமூர்த்தி வரவேற்றுள்ளார். மாநில நிர்வாகத்தின் மீது அவருக்கு இருக்க வேண்டிய கட்டுப்பாடு இல்லாமற் போய் விட்டது என்றும், விடுதலைப் புலிகள் சிறையிலிருந்து தப்பியது குறித்து ஆளுநர் அலட்சியமாக இருந்தார் என்றும் அவர் கூறினார்.

பீஷ்மன் நாராயண் சிங் ராஜினாமா குறித்து தாம் மகிழ்ச்சி அடைவதாகத் தி. மு. க. தலைவர் மு. கருணாநிதி தெரிவித்தார்.

இதேபோல் . தமிழக முன்னாள் அமைச்சரும், தமிழக நல்லாட்சி இயக்கத் தலைவர்களில் ஒருவருமான க இராஜாராம் ஆளுநர் பதவி விலகியதை வரவேற்றுள்ளார். அவரை மாற்ற வேண்டும் என நல்லாட்சி இயக்கம் பல முறை கேட்டுக் கொண்டது என்றும் அவர் குறிப்பிட்டார்.

நீண்ட கால அரசியல் அனுபவம் உடையவரும் மத்திய அமைச்சராக, ஆந்திர முதலமைச்சராக பல மாநிலங்களில் ஆளுநராக இருந்த டாக்டர் சென்னா ரெட்டி தமிழகத்தில் நியமிக்கப்பட்டது மாநிலத்தில் பாரபட்சமற்ற ஆட்சி நடைபெற ஏதுவாக அமையும் என்றும் இராஜாராம் கூறினார்.

## கிளின்டன் தலைமுடி விமானங்களை தாமதித்தது

[வாஷிங்டன்]

அமெரிக்க ஜனாதிபதி கிளின்டன் லொஸ் ஏஞ்சல்ஸ் விமான நிலையத்தின் ஓடுபாதையில் தனது விமானத்தில் வைத்து தலைமயிரை வெட்டிக்கொண்டதால் இரு ஓடுபாதைகள் சுமார் ஒரு மணி நேரம் மூடப்பட்டன. இதனால் அங்கு இறங்கவிருந்த விமானம் ஒன்று 17 நிமிடங்கள் ஆகாயத்தில் வட்டமிட்ட வண்ணம் இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

இதையடுத்து அரிசோனாவிலிருந்து வந்த பிரயாணிகள் விமானம் ஒன்று 25 நிமிட நேரம் தாமதிக்கப்பட்டது. வேறுசில விமானங்கள் தரையிறங்க 10 நிமிடங்கள் தாமதம் ஏற்பட்டது.

## ஹெலி விபத்து 4 பேர் பலி

(வாஷிங்டன்)

வெள்ளை மாளிகையின் உபயோகத்திலிருந்த கடற்படை உலங்கு வானூர்தி ஒன்று மேரிலாந்து கடற்படை தளம் ஒன்றினருகில் வீழ்ந்து நொருங்கியதில் அதிலிருந்த 4 விமானிகள் பலியாகினர்

ஜனாதிபதியின் விமானத்திற்கு துணையாக செல்லும் இந்த வி எச்—60 பிளேக்ஹாக உலங்குவானூர்தி வெள்ளை மாளிகையின் பல விமானங்களில் ஒன்றாகும்.

## நீதிபதிகள் தொடர்பு

(நேப்பிள்ஸ்)

நேபிள்ஸை சேர்ந்த 11 நீதிபதிகளுக்கு மாபியா இயக்கத்துடன் தொடர்புள்ளதாக இத்தாலிய தொலைக்காட்சி தெரிவித்துள்ளது. இதையடுத்து நேப்பிள்ஸ் நீதிபதி லம்பர்டி கைதானார். இதே சமயம் மேலும் 3 நீதிபதிகள் மீதும் சட்டத்தரணி ஒருவர் மீதும் இரண்டு மேல் நீதிமன்ற நீதிபதிகள் மீதும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இவர்கள் கைது செய்யப்படலாம் என்றும் கூறப்பட்டுள்ளது.

ஈழநாதம்

# தலைவரைக் கொலை செய்த அரசுடன் சேரமாட்டோம்

– காமினி திசநாயக தெரிவிப்பு

(கொழும்பு)

''எமது கட்சித் தலைவர் அத்துலத்முதலியை கொலை செய்த அரசாங்கத்துடன் எந்தக் கட்டத்திலும் நாம் சேரப் போவதில்லை' என ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணிச் செயல் திட்டத் தலைவர் காமினி திசநாயக்க ராவய பத்திரிகைக்குத் தெரிவித்தார்.

தமது கட்சியும் கட்சியின் ஏனைய அங்கத்தவர்களும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைவதற்கு முயற்சி செய்து வருவதாக வெளிவந்த செய்தியில் எதுவித உண்மையும் இல்லை என தெரிவித்த அவர் ''இது அரசாங்கத்தின் பொய்ப் பிரசாரம்'' என்று கூறினார்.

''மக்களுக்கு ஓர் அரசியல் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த முயன்ற போது எமது தலைவர் கொல்லப்பட்டார். அந்தக் கொள்கைக்காக ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி தொடர்ந்து செயல்படும். பதவிகளுக்காகவும் சலுகைகளுக்காகவும் நாங்கள் மாறப்போவதில்லை.

''நாம் மக்களுக்கு அரசியல் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் நோக்கத்துடனேயே பதவிகளையும், சலுகைகளையும் விட்டு வெளியேறினோம். இதனை எம்மைப்பற்றி பொய்யான கருத்துக்களை வெளியிடுபவர்கள் உணர வேண்டும்'' என மேலும் அவர் தெரிவித்தார்.

## பிரேமாவின் கொலைவீடியோ விசாரணை நடத்த பணிப்பு

[கொழும்பு]

ஜனாதிபதி பிரேமதாசா கொல்லப்பட்ட ஆமர் வீதி குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பான வீடியோப்படம் அன்றைய தினமே பல வெளிநாடுகளில் தொலைக் காட்சியில் காட்டப்பட்டது தொடர்பாக விசாரணை நடத்துமாறு இன்ரபோல் பணிக்கப்பட்டுள்ளது.

குண்டு வெடிப்பின் போது அச்சம்பவம் குறித்து தாக்குதல் நடத்தியவாகள் வீடியோப்படம் பிடித்திருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் பொலிசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

வெளிநாடுகளில் காட்டப்பட்ட தொலைக்காட்சி படத்தில் குண்டுவெடிப்பு தொடர்பான முக்கியமான கட்டங்கள் இடம் பெற்றிருந்ததாகவும் குண்டுவெடிப்பினால் ஏற்பட்ட உடனடி சேதங்கள் காட்டப்பட்டதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

இந்த வீடியோநாடாக்களை இங்கு ஆராயவென அவற்றைப் பெற்றுக்கொள்ள இன்ரபோல் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. அதேசமயம் உள்ளூர் நிருபர்களிடமிருந்தும் சம்பவம் குறித்த படங்களைப் பொலிசார் சேகரித்து வருகின்றனர்.

## யாழ். ஆஸ்பத்திரிக்கு

இருப்பதாகவும் கூறப்படுகிறது

அதேவேளை மேற்படி விடயம் குறித்து நடவடிக்கை எடுப்பதற்கும் தற்போது பழுதடைந்த நிலையில் மேற்படி வைத்தியசாலையில் இருக்கும் மின்பிறப்பாக்கியை திருத்துவதற்கான நடவடிக்கை குறித்தும் ஆராய்வதற்கும் மேற்படி வைத்தியசாலையைச் சேர்ந்த மருத்துவ அதிகாரிகள் குழு ஒன்று நேற்று கப்பல் மூலம் கொழும்பு விரைந்தது.

## பரீட்சை வினாத்தாள்கள் அனுமதி அட்டைகள் வந்தன

(வடமராட்சி)

யாழ். மாவட்டத்தில் இம் மாத இறுதியில் நடைபெறவுள்ள பரீட்சைகளுக்கான வினாத்தாள்கள், அனுமதி அட்டைகள் யாவும் யாழ். கல்வித் திணைக்களத்திற்கு எடுத்துவரப்பட்டுள்ளன.

கொழும்பிலிருந்து நேற்றுத் திருப்பிய யாழ். பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு தியாகராசா தொலைக்கல்வி ஆசிரியர் பயிறசி இறுதிப் பரீட்சை, பட்டப்பின் படிப்பு கல்வித் தகைமை சான்றிதழ்பரீட்சை, அரச சிற்றூழியர்கள் போட்டிப் பரீட்சை ஆகிய பரீட்சைகளுக்கான வினாத்தாள்கள், அனுமதி அட்டைகளை எடுத்துவந்துள்ளார்.

பரீட்சைகளுக்குத் தோற்ற இருக்கும் பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் உடனேயே தபாலில் சேர்க்கப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை யாழ். மாவட்டப்பாடசாலைகளுக்கென ஒரு தொகுதி தளபாடங்கள் 'குமாரி' கப்பலில் எடுத்து வரப்படும். (யோ)

## 5 ஆம் ஆண்டு

## ஆதாரம் காட்டிப் பெறவும்

(வடமராட்சி)

பருத்தித்துறை கொட்டடி ஆலயத்துக்கு அருகில் உள்ள கேணியில் இருந்து கைக்கடிகாரம் ஒன்று கண்டெடுக்கப்பட்டு துறைமுகத்தில் பொதி சுமக்கும் தனியார் வாகன ஒன்றிய அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் தகுந்த ஆதாரத்தை காட்டிப் பெற்றுக் கொள்ளலாம்.

(யோ)

## கலந்துரையாடல்

பல நோ. கூ. சங்கத்தலைவர்கள் மற்றும் பொது முகாமையாளர்களுக்கான முக்கிய கலந்துரையாடலொன்று நாளை புதன்கிழமை காலை 9. 00 மணிக்கு யாழ் மாவட்ட கூட்டுறவுசபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மேலும் இக்கூட்டத்தில் பொது நிர்வாகம் தொடர்பாக பிரதிநிதிகளும் கலந்து கொள்கின்றனர்.

## ஆசிரியர் தராதரப் பத்திரங்கள் வந்தன

[வடமராட்சி]

பலாலி ஆசிரியர் கலாசாலையில் பயிறசி பெற்று சித்தியடைந்த ஆசிரியர்களுக்கான தராதரப்பத்திரங்கள் கலாசாலை அதிபரினால் கொழும்பிலிருந்து 'குமண' கப்பல் மூலம் நேற்று எடுத்து வரப்பட்டுள்ளன.

1986, 1987, 1988 ஆம் ஆண்டுகளில் பயிற்சி பெற்று சித்தியடைந்த ஆசிரியர்களுக்கான தராதரப் பத்திரங்களே வந்து சேர்ந்துள்ளன.

தகுதியானவர்கள் இத்தராதரப் பத்திரங்களை பலாலி ஆசிரியர் கலாசாலையில் பெற்றுக்கொள்ளலாமென கலாசாலை அதிபர் திரு. ஆர். எஸ். நடராசா தெரிவித்தார்,

(யோ)

## 'குமண' காலை வந்து மாலை புறப்பட்டது

[வடமராட்சி]

பருத்தித்துறை துறைமுகத்திற்கு நேற்று காலை வந்து சேர்ந்த 'குமண' கப்பலில் நோயாளிகள், உதவியாளர்கள், உத்தியோகத்தர்கள் உட்பட 98 பேர் வந்தனர். அதே போன்து சுமார் 90 பேர் திருக்கோணமலை நோக்கி பிற்பகல் புறப்பட்டனர்.

இக்கப்பலில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தைச் சேர்ந்த இரண்டு உயர் அதிகாரிகளும் யாழ். நோக்கி வந்தனர்.

[யோ]

## இருந்த ஆசனமும் பறிபோனது

(கொழும்பு)

கடந்த மாகாணசபை தேர்தலில் மத்திய மாகாணத்திலும் முஸ்லிம் காங்கிரஸ் படுதோல்விகண்டுள்ளது. முன்பு அக்கட்சி இம்மாகாணத்தில் வைத்திருந்த மூன்று ஆசனங்களையும் இம்முறை அது இழந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## லலித் இறுதி ஊர்வலம் ஹேமா பார்வையிட்டார்

[கொழும்பு]

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர் லலித் அத்துலத் முதலியின் இறுதி ஊர்வலத்தை திருமதி ஹேமா பிரேமதாசா ... என ராவய பத்திரிகை செய்தி வெளியீட்டுள்ளது.

இவ்வாறு இவர் நின்று பார்த்ததினாலேயே இறுதி ஊர்வலதஇன் போது கறுவாக்

# திருமலையில் புலிகள் சுதந்திரமாக நடமாட்டம்

## சுதந்திரகட்சி எம். பி

[கொழும்பு]

திருக்கோணமலையில் புலிகள் சுதந்திரமாக நடமாடுகின்றனர். ஆயுதப்படைகளினது பலம் இவர்களை எதிர்த்து போராடுவதற்கு போதுமானதாக இல்லை. இவ்வாறு திருமலை சுதந்திரக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் எம். கே. ஏ. டி. எஸ். குணவர்தனா பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

படையினருக்கு நவீன தொலைத் தொடர்பு கருவிகள் வழங்கப்படவேண்டும். விடுதலைப் புலிகள் நவீன கருவிகளைக் கொண்டுள்ளனர். கந்தளாய் சீனி தொழிற்சாலையில் பாதுகாப்பு நிலைமை ஆபத்தானதாக உள்ளது. திருமலையில் சிங்களக் குடியேற்றங்கள் நிறுத்தப்பட்டுவிட்டன. திருமலையில் உள்ள சிங்களவர்கள் ஆதரவு ஏதுமின்றி உள்ளனர். பொதுச் சேவையில் பாஸ்கரலிங்கம் இருக்கும்வரை திருமலையில் உள்ள சிங்கள அரச ஊழியர்கள் நீதியை எதிர்பார்க்க முடியாது என்றே அப்பகுதி மக்கள் உணர்கின்றனர் என்றும் சுதந்திரக் கட்சி எம். பி. மேலும் தெரிவித்தார்

## நீதி

எதிர்க்கட்சி உறுப்பினர்களும் ஒன்றிணைந்து எதிர்க்கட்சியினர் நியமிக்கும் முதலமைச்சருக்கு ஆதரவு தெரிவிப்பதென சத்தியக் கடதாசி மூலம் ஆளுநருக்கு அறிவித்துள்ளனர் என்றார்.

இந்த வழக்கிற்கு சாட்சிகள் அழைக்கப்படுவதில்லை சத்திய கடதாசிகள் மூலம் நிரூபிக்கப்படுவதன் மூலம் விரைவில் தீர்ப்பு வழங்கப்படமுடியும்.

அரசியல் யாப்பின் 13வது திருத்தத்தின் கீழ் கூடிய அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன அவ் அதிகாரத்தை பயன்படுத்தி தான் நினைத்தவாறு நடந்துகொள்ள ஐக்கிய தேசியக் கட்சி விரும்புகிறது. அ...

## பிரேமாவுக்கு நெருங்கியோர் பொலிசாரால் கைது

[கொழும்பு]

மரணமடைந்த ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவுடன் மிக நெருக்கமாகப் பழகிய பலர் இரகசியப் பொலிசாரினால் கைதுசெய்யப்பட்டுவிசாரணை செய்யப்பட்டு வருவதாக சிறிலங்கா பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜனாதிபதியை கொலை செய்தவர் அவருடன் மிக நெருக்கமாகப் பழகியவர் என பொலிசார்கருதுவதனாலேயே அவருடன் நெருக்கமாகப் பழகிய பலரும் கைது செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் அடிப்படையில் சகலரும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருப்பதாகவும், இவ்வாறு பலதரப்பட்டவர்களும் விசாரணை செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

## சந்திரிகாவிற்கான வாக்கு சிறிமாவைவிட அதிகம்

(கொழும்பு)

திருமதி சந்திரிகா குமாரணதுங்க தனது தாயார் சிறிமாவோ பண்டாரநாயக்கா 1989 தேர்தலில் கம்பஹா தொகுதியில் பெற்ற விருப்பு வாக்குகளைவிட 84,067 வாக்குகளை அதிகமாக இம்முறை நடைபெற்ற மாகாண சபை தேர்தலில் பெற்றுள்ளார்.

சிறிமாவோ அப்போது 214,390 விருப்பு வாக்குகளை பெற்றிருந்தார்.

இதே சமயம் லலித் அத்துலத்முதலி 1980 இல் ஐ தே. க. வேட்பாளராக போட்டியிட்ட போது 235, 447 விருப்பு வாக்குகளை பெற்றார். இம்முறை அவர் கொல்லப்பட்ட நிலையில் அவரால் 126.777 விருப்பு வாக்குகளையே பெறமுடிந்துள்ளது.

இதே போன்று 1989 இல் ஐ. தே. கவின் வேட்பாளராக நுவரெலியாவில் போட்டியிட்ட காமினி திசநாயக்கா 73, 790 விருப்பு வாக்குகளை பெற்றார். ஆனால் இம்முறை ஜ. ஐ தே. மு சார்பில் போட்டியிட்ட போது 66,574 விருப்பு வாக்குகள் மட்டுமே பெற்றார். இவரின் மனைவி சிறிமதி இத்தேர்தலில் 24,648 விருப்பு வாக்குகளை பெற்றார்.

## இந்தியப் படையை மீண்டும் அழையுங்கள்

ஜனாதிபதியிடம் கோரிக்கை

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு எதிராக கடுமையான இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ள இந்திய இராணுவத்தை மீண்டும் வரவழைக்குமாறு இலங்கையின் புதிய ஜனாதிபதி டி. பி.விஜயதுங்காவிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கொழும்பு பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளதாக இலங்கை வானொலி தெரிவித்தது இது குறித்த மேலதிக விபரங்கள் தெரியவரவில்லை.

## அரசை ஆதரித்ததே எமது தோல்விக்கு காரணம்

-அஷ்ரப்

மாகாணசபைதேர்தல்களில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் படுமோசமாக தோல்வி கண்டமைக்கு காரணம் ...

விவகாரத்தை கையாள வேண்

வெளிநாடுகளில் காட்டப் பட்ட தொலைக்காட்சி படத்தில் குண்டுவெடிப்பு தொடர்

### யாழ். ஆஸ்பத்திரிக்கு

இருப்பதாகவும் கூறப்படுகிறது

அதேவேளை மேற்படி விடயம் குறித்து நடவடிக்கை எடுப்பதற்கும் தற்போது பழுதடைந்த நிலையில் மேற்படி வைத்தியசாலையில் இருக்கும் மின்பிறப்பாக்கியை நிருத்துவதற்கான நடவடிக்கை குறித்தும் ஆராய்வதற்கும் மேற்படி வைத்தியசாலையைச் சேர்ந்த மருத்துவ அதிகாரிகள் ஏழு ஒன்று நேற்று கப்பல் மூலம் கொழும்பு விரைந்தது.

(வடமராட்சி)

யாழ். மாவட்டத்தில் இம் மாத இறுதியில் நடைபெறவுள்ள பரீட்சைகளுக்கான வினாத்தாள்கள், அனுமதி அட்டைகள் யாவும் யாழ். கல்வித் திணைக்களத்திற்கு எடுத்துவரப்பட்டுள்ளன.

கொழும்பிலிருந்து நேற்றுத் திருப்பிய யாழ். பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு தியாகராசா தொலைக்கல்வி ஆசிரியர் பயிற்சி இறுதிப் பரீட்சை, பட்டப்பின் படிப்பு கல்வித் தகைமை சான்றிதழ்பரீட்சை, அரச சிற்றூழியர்கள் போட்டிப் பரீட்சை ஆகிய பரீட்சைகளுக்கான வினாத்தாள்கள், அனுமதி அட்டைகளை எடுத்துவந்துள்ளார்.

பரீட்சைகளுக்குத் தோற்ற இருக்கும் பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் உடனேயே தபாலில் சேர்க்கப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை யாழ். மாவட்டப்பாடசாலைகளுக்கென ஒரு தொகுதி தளபாடங்கள் 'குமாரி' கப்பலில் எடுத்து வரப்படும். (யோ)

உட்பட 98 பேர் வந்தனர். அதே போன்று சுமார் 90 யாழ். நோக்கி வந்தனர். [யோ]

### இருந்த ஆசனமும் பறிபோனது

(கொழும்பு)

கடந்த மாகாணசபை தேர்தலில் மத்திய மாகாணத்திலும் முஸ்லிம் காங்கிரஸ் படுதோல்விகண்டுள்ளது. முன்பு அக்கட்சி இம்மாகாணத்தில் வைத்திருந்த மூன்று ஆசனங்களையும் இம்முறை அது இழந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## லலித் இறுதி ஊர்வலம் ஹேமா பார்வையிட்டார்

[கொழும்பு]

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர் லலித் அத்துலத் முதலியின் இறுதி ஊர்வலத்தை திருமதி ஹேமா பிரேமதாசா கறுவாக்காடு பொலிஸ் நிலைய மேல் மாடியில் நின்று பார்த்துள்ளார் என ராவய பத்திரிகை செய்தி வெளியீட்டுள்ளது.

இவ்வாறு இவர் நின்று பார்த்தினாலேயே இறுதி ஊர்வலத்தின் போது கறுவாக்காட்டு பொலிஸ் நிலையம் தாக்கப்பட்டது என தெரிவிக்கப்படுகிறது.

### நீதி

எதிர்க்கட்சி உறுப்பினர்களும் ஒன்றிணைந்து எதிர்க்கட்சியினர் நியமிக்கும் முதலமைச்சருக்கு ஆதரவு தெரிவிப்பதென சத்தியக் கடதாசி மூலம் ஆளுநருக்கு அறிவித்துள்ளனர் என்றார்.

இந்த வழக்கிற்கு சாட்சிகள் அழைக்கப்படுவதில்லை சத்திய கடதாசிகள் மூலம் நிரூபிக்கப்படுவதன் மூலம் விரைவில் தீர்ப்பு வழுங்கப்படமுடியும்.

அரசியல் யாப்பின் 13வது திருத்தத்தின் கீழ் கூடிய அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன அவ் அதிகாரத்தை பயன்படுத்தி தான் நினைத்தவாறு நடந்துகொள்ள ஐக்கிய தேசியக் கட்சி விரும்புகிறது. அதனாலேயே தென், வடமேல் மாகணங்களில் அதிகாரத்தை எப்படியாவது கைப்பற்றிவிட வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி முயல்கிறது என அவர் மேலும் தெரிவித்தார்.

### அரசின்

அதேவேளை: வடமேல் மாகாணத்திலும் ஆளும்கட்சி ஆட்சி அமைத்திருப்பது ஜனநாயக விரோதமானது என்றும் சட்டத்திற்கு எதிரானது என்றும் அரசு மீது குற்றம் சாட்டி உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல செய்யப்படவுள்ளதாகவும் எதிரணிக் கட்சிகள் அறிவித்துள்ளன.

### மீனவர்கள்

அன்றைய தினம் அப்பகுதியில் அதிக மீன்பிடி வள்ளங்கள் காணப்பட்டதை அடுத்தே எறிகணை வீச்சுக்கள் நடத்தப்பட்டதாகஅறியப்படுகிறது

மேற்படி எறிகணைத் தாக்குதலுக்கு இலக்காகாமல் மீனவர்கள்மயிரிழையில்தப்பிவந்ததாகவு கூறப்படுகிறது. [21

### வீரப்பனின்

டது. காயமடைந்தவர்கள் சேலம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

நேற்று கொல்லப்பட்டவர்களுடன் சேர்த்து வீரப்பனால் கொல்லப்பட்டவர் தொகை 53 ஆகியது.

காயமடைந்தபொலிஸாரை பார்வையிட கர்நாடக முதலமைச்சர் மொய்லி சேலம் விரைந்துள்ளார். இதேசமயம் வீரப்பன் குழுவை பிடிக்கும் விடயத்தை மத்திய அரசிடம் ஒப்படைக்கும்படி கர்நாடக சட்டசபை எதிர்க்கட்சி தலைவர் கோரிக்கை விடுத்துள்ளார்

இதேவேளை வீரப்பன் தரப்பில் 8 பேர் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

துலத்முதலி 1980 இல் ஐ.தே.க. வேட்பாளராக போட்டியிட்ட போது 235, 447 விரு

சிறிமதி இத்தேர்தலில் 24,648 விருப்பு வாக்குகளை பெற்றார்.

## இந்தியப் படையை மீண்டும் அழையுங்கள்

ஜனாதிபதியிடம் கோரிக்கை

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு எதிராக கடுமையான இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ள இந்திய இராணுவத்தை மீண்டும் வரவழைக்குமாறு இலங்கையின் புதிய ஜனாதிபதி டி. பி.விஜயதுங்காவிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கொழும்பு பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளதாக இலங்கை வானொலி தெரிவித்தது இது குறித்த மேலதிக விபரங்கள் தெரியவரவில்லை.

## அரசை ஆதரித்ததே எமது தோல்விக்கு காரணம் -அஷ்ரப்

மாகாணசபைதேர்தல்களில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் படுமோசமாக தோல்வி கண்டமைக்கு காரணம் அவசரகால சட்ட நீடிப்பு போன்ற முக்கிய விவகாரங்களில் அது அரசுக்கு சார்பாக செயற்பட்டமையே என கட்சியின் தலைவர் அஷ்ரப் தெரிவித்தார்.

மாகாணசபை தேர்தலில் எமக்கு ஏற்பட்ட தோல்வியை நாம் ஏற்கின்றோம். இதில் என்ன வெட்கம்? முஸ்லிம்கள் ஓரணியில் திரளுமாறு எமது கட்சி விடுத்த கோரிக்கையை முஸ்லிம்கள் நிராகரித்திருக்கலாம்

புலிகள் விவகாரத்தை அரசு சரியாக கையாளவில்லை. புலிகளை இராணுவ ரீதியில் ஒழிக்க அரசு ஒரு புறத்தில் எமது ஆதரவைக் கோரும்போது மறு புறத்தில் அமைச்சரவைக்குள் இருந்து புலிகளுக்கு ஆதரவான குரல் கேட்கின்றது புதிய ஜனாதிபதி வடக்கு-கிழக்கு விவகாரத்திற்கே முக்கியத்துவம் கொடுத்து புலிகளின் விவகாரத்தை கையாள வேண்டும் என்றும் அஷ்ரப் மேலும் தெரிவித்தார்.

### உணவுக்

மாத ஆரம்பத்திலேயே பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

அதேவேளை தற்பொழுது கொழும்பு துறைமுகத்தில் "வாதுவ" என்ற கப்பல் தரித்துநிற்கிறது. இக்கப்பலின் கொள்ளளவின் 50 சதவீகிதமான அத்தியாவசியப்பொருள்கள் கப்பலில் ஏற்றப்பட்டவுடன் இக்கப்பல் திருக்கோணமலைக்கு புறப்பட்டுச் செல்லும். அங்கு மிகுதி 50 சதவிகிதக் கொள்ளளவுக்கு மா ஏற்றப்படவிருக்கிறது. பின்னர் அங்கிருந்து புறப்பட்டு ஞாயிற்றுக்கிழமை பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

முன்னாள் தென்மராட்சி அரசியல் பொறுப்பாளர்

**கப்டன் நகுலன் - குழந்தை**

[வேலுப்பிள்ளை - நகுலேஸ்வரன்]

நகுலேஸ்வரன் வீதி, மீசாலை வடக்கு

கல்வயலில் இந்தியப்படையின் சுற்றிவளைப்பில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவடைந்தார்.

வீரப்பிறப்பு 30-11-1966

வீரச்சாவு 24-05-1988

நகுலன்!

மந்துவில் மண்ணும், மாசார் வெளியும்
மட்டுவில் வயலும் இவன் பெயர் சொல்லும்
மீசாலைப் புழுதியும், கைதடிப் பாலமும்
மாவீரன் இவனின் கதை சொல்லும்
தட்டான் குளமும், கல்வயல் காற்றும்
குழந்தை நகுலனின் குரல் கூறும்
இவன் நடந்த கண்டாவளை வயல்களும்
போராடிய களங்களும் இன்னும்
புதிய புலிகளைப் பிரசவிக்கும்
ஏனெனில் இவன் மண்ணில் வித்தாய் வீழ்ந்தவன்.

(சி-6680) குடும்பத்தினரும், நண்பர்களும்

## மரண அறிவித்தல்


### திருமதி பெனடிற் எலிசபேத்

யாழ்ப்பாணம் இல. 19/11, அடப்பன் வீதியைச் சேர்ந்த பெனடிற் எலிசபேத் (மாணிக்கம்) அவர்கள் 24-05-93 திங்கட்கிழமை காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற பெனடிற் தம்பிராசாவின் மனைவி ஆவார். அன்னாரின் பூதவுடல் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 3 30 மணியளவில் பரிசுத்தகொஞ்சேஞ்சிமாதா ஆலயத்திற்குஎடுத்துச் செல்லப்பட்டுதிருப்பலியின் பின் நல்லடக்கம்செய்யப்படும்.

தகவல்: மருமக்கள்.

19/11 அடப்பன் வீதி,
யாழ்ப்பாணம். (4956)

## 10-ம் ஆண்டு நினைவஞ்சலி



பிரபல சமூக சேவையாளரும்
பிரபல வர்த்தகருமாகிய

**அமரர் சூரன் மாணிக்கம்**

மலர்வு: 27-8-1920

உதிர்வு: 25-5-1983

உன்பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள்,
மருமக்கள்.

அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி.

(சி 6679)

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 23-05-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 9531

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்: இல்லை.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

26-6628, 26-0536, 27-9416, 22-6922, 26 0512, 42-3964, 24-7267, 28-7662, 24-1209, 40-5216, 28-4255, 41-8432, 41-9396, 26-1583, 40-7584, 26-2108, 41-3931, 41-6933, 27-0994.

### 24-05-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 9538

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

28-0159, 26-3784, 27-1122, 26-6933, 26-4885, 28 1049, 26-4281, 24-5119, 27-6583, 27-6579, 26-7272, 26-4727, 41-9997, 24-4957, 40-9188, 25-7125, 25-3925, 73-6877, 43-1062.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

27-9772, 27-4023, 26-9658, 24-6855, 41-6296, 24-4465, 22-3641.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31-ம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993 -ம் ஆண்டு மே மாசம் 25 -ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.